**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure) .....
IN THE COURT OF IV ADDITIONAL SESSIONS JUDGE
S.C. No.111/2022
Prosecution witness :PW5 /LW6

| | | | |
|---|---|---|---|
| Name | Mr.Ranjith kumar | Caste | : Not willing |
| Father’s Name | : Veeraragavan | Calling | : Lodge Owner |
| Village | : Arumbakkam | Religion | : Hindu |
| Taluk | : Chennai | Age | : 33 |

( A2, A3, A5, A6,A7 present)

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 29th day of October, 2024.

**முதல் விசாரணை ( அரசு தரப்பில்)**

நான் கதவு எண் 180, ஜவகர்லால் நேரு தெரு, அரும்பாக்கம், சென்னை 106 என்ற முகவரியில் குடியிருக்கிறேன். கடந்த 2021 ஆம் ஆண்டு C.N. Guest House யை நான் லீசுக்கு எடுத்து நடத்தி வைந்தேன். அது அரும்பாக்கத்தில் இருக்கிறது. மணி எண்பவர் பக்கத்தில் உள்ள தமிழ் Guest Houseல் Recepition ஆக இருந்து வந்தார். கடந்த 2021 ஆம் ஜீன் மாதம் நான் வீட்டில் இருக்கும்போது ஏதோ பிரச்சனை என்று எனது Guest Houseல் Recepitionல் இருந்து போன் வந்தது. நான் உடனே அங்கு சென்றேன். நானும் பக்கத்து லாட்ஜை சேர்ந்த மணி என்பவர் இருக்கும்போது கே.8 அரும்பாக்கம் காவல்நிலையத்தை சேர்ந்த 4, 5 போலீசார் 3 ஸ்டார் Guest House அருகில் வந்தார்கள். எங்களை அழைத்தார்கள். நானும் மணியும் அங்கு போனோம். அங்கு யாரோ இறந்துவிட்டதால்

விசாரிக்க வந்திருப்பதாக சொன்னார்கள். அங்கு விசாரணை செய்து 4, 5 பொருட்களை எடுத்து கொண்டு போவதற்காக கையெழுத்து போடவேண்டும் என்று சொன்னார்கள். நானும் மணி என்பவரும் கையெழுத்து போட்டோம் அது மகசர் அ.சா.ஆ.6. அந்த லாட்ஜ்யை சேர்ந்த ஒரு நபர் அந்த பொருட்களை எடுத்து போலீசாரிடம் கொடுத்தார். Hard disc-1, arrival Register -1, Advance receipt Book -1, class mate note -1(Long size), Room போட்ட நபருடைய ஆதார் கார்ட், ஆகியவற்றை எடுத்துகொண்டதற்காக என்னிடம் கையெழுத்து வாங்கினார். Disc சா.பொ.2 ஆக ஏற்கனவே குறீயீடு செய்யப்பட்டுள்ளது. Advance receipt, Arrival register, classmate note ஆகியவை ஏற்கனவே ஆ.சா.ஆ.3, 4, 5 ஆக குறியீடு செய்யப்பட்டது. ஆதாரர் அட்டை ஏற்கனவே ஆ.சா.ஆ2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை:(1ஆம்எதிரி தரப்பில்</u>**

போலீசார் விசாரிக்கும்போது கதவு எண்6 அசோகா நகர் அரும்பாக்கம், சென்னை 106 என்ற முகவரி சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். போலீசார் சொல்லி பொய்யான தகவலை சாட்சியமாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. என்னுடை லீஸ் அக்ரிமெண்ட கேட்டார்களா என்றால் கேட்கவில்லை கொடுக்கவில்லை. அதனால் லீஸ்சுக்கு எடுத்து Guest House நடத்தியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. சம்பவம் பற்றி போலீசார் சொல்லிதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். சம்பவ காலமான கோவிட் 19 தடைகாலம் என்றால் சரிதான். அதனால் போலீசார் என்னை அழைக்கவில்லை என்றும் விசாரிக்கவில்லை என்றும் நான் அத்தாட்சி மகசரில் கையெழுத்து போடவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 5 பொருட்கள் என்ன என்று தெரியாது என்றும் அதனால் எனது சாட்சியம் பொய்யானது என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>குறுக்குவிசாரணை:(2,5ஆம் எதிரிதரப்பில்)</u>**

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் பொருட்களை எடுத்துகொண்டு போகிறோம் என்று சொல்லி கையெழுத்து வாங்கினார்கள். சாட்சி தற்போது என்னை விசாரிக்கவில்லை என்று கூறுகிறார். போலீசார் கேட்டுகொண்டதற்காக சாட்சியாக இருந்தேன் என்றால் நோட்டு புக்குகளை எடுத்து கொண்டு போனதற்காக சாட்சியாக இருந்தேன். நோட்டுகளை எடுத்து கொண்டு போனதாக சொல்லப்படும் காலகட்டமானது கோவிட்19 காலகட்டம் என்றால் சரிதான். அந்த சமயத்தில் பெரும்பாலன கடைகள் அடைக்கப்பட்டிருந்தன என்றால் சரிதான். நான் மேற்படி Guest Houseஐ யாரிடம் இருந்து எவ்வளவு காலகட்டத்திற்கு லீஸ்சுக்கு எடுத்து இருந்தேன் என்பதை போலீசில் சொல்லவில்லை என்றால் சரிதான். 17.06.2021 ல் நான் வீட்டில் இருந்தேன் என்றால் சரிதான். எனது வீடு Guest House ல் இருந்து சுமார் 1 கி.மீ தொலைவில் உள்ளது. மேற்படி Guest Houseக்கும் கே.8 அரும்பாக்கம் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் 3/4 to 1.K.M. இருக்கும். பொதுவாக Guest House, lodge ஆகியவற்றில் காவல் நிலை தொலைபேசி எண்களை குறித்து வைத்திருப்பார்கள் என்றால் சரிதான். என்னை 17.06.2021 அன்று என்னுடைய வாட்ச்மேன் தகவல் சொல்லி நான் அங்கு போனேன் என்றால் சரிதான். எனக்கு வாட்ச்மேன் தகவல் சொல்லும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் தெரியவில்லை ஆனால் இரவு நேரம். எத்தனை மணிக்கு போனேன் என்றால் இரவில் போனேன். நான் உண்மையில் Guest House நடத்தவில்லை என்றும் 3 star Guest House போனதாக சொல்வது பொய் என்றும் சொன்னால் சரியல்ல. நான் அத்தாட்சி மகசரில் உள்ள கையெழுத்து நிலையத்தில் வைத்து போட்டேன் என்றால் சரியல்ல. காவல் துறை சொல்லி கொடுத்ததன் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் முன்னிலையில் ஆவணங்களோ, சான்று பொருட்களோ கைபற்றபடவில்லை என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை:(3ஆம் எதிரிதரப்பில்)**

(2, 5 எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது).

**குறுக்கு விசாரணை (6,7 எதிரிகள் தரப்பில்)**

இல்லை

Taken down by me in the open court and was read over to the witness and accepted and signed by him/her to be correct

V PANDIARAJ
Digitally signed by V PANDIARAJ
Date: 2024.10.29 18:39:28 +0530

Dt:29.10.2024 IV Additional Judge.